**செய்தி வெளியீடு எண்: 10/2025** **நாள்: 26.01.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 76-வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது**

சென்னை, நந்தனதில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மெட்ரோஸில் 76-வது குடியரசு தின விழா இன்று (26.01.2025) நடைபெற்றது. இவ்விழாவில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் / அரசு முதன்மை செயலாளருமான திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்னர், குடியரசு தின விழாவையொட்டி சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக மெட்ரோஸில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பேட்மிண்டன், செஸ், கேரம், கிரிக்கெட், சுறுசுறுப்பான நடை (Brisk Walk), மற்றும் டேபிள் டென்னிஸ் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் ஏற்கனவே நடைபெற்றது. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற 49 நபர்களுக்கும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் அலுவலர்களின் பணியை அங்கீகரிக்கும் வகையில் 24 நபர்களுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் / அரசு முதன்மை செயலாளருமான திரு. மு.அ.சித்திக், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

இதுதவிர NKAB GC1 தனியார் முன்னிலை நிறுவனம் நடத்திய மட்டைபந்து (Cricket) போட்டியில் 16 தனியார் நிறுவனங்கள் பங்கேற்றனர். இதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கிரிக்கெட் அணியினர் போட்டியில் பங்கேற்று வெற்றிப்பெற்றனர். இதற்கான பரிசு கோப்பையை மேலாண்மை இயக்குநரிடம் வழங்கி பாராட்டுப்பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), திரு. தி. அர்ச்சுனன் (திட்டங்கள்), முதன்மை பாதுகாப்பு அதிகாரி எச்.ஜெயலக்ஷ்மி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் பொது ஆலோசக நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**